செ.வெ.எண்: 75 நாள்: 30.10.2021

# மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் குண்டடம் ஊராட்சி ஒன்றியம் ஆறத்தொழுவு ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 42 பயானாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி மாபெரும் மரக்கன்றுகள் நடும் பணிகளை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகுசெய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் இன்று (30.10.2021) குண்டடம் ஊராட்சி ஒன்றியம் ஆறத்தொழுவு ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வழங்கினார்கள்.

*மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வளர்ச்சிக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று 5 மாத காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார்கள்.

கொரோனா நோய்த்தொற்று அச்சுறுத்தல் காரணமாக தமிழக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கு வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் 4,000 ரூபாய் வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்கள்.

தேர்தல் அறிக்கையில் அளித்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மக்களின் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் குறைத்து விற்பனை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

தேர்தல் வாக்குறுதியில் இடம் பெற்றிருக்கும் அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில் தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக்கட்டுப்பட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் சர்க்கரை நோயாளிகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களில் பாதிக்கக்கட்டவர்கிளன் இல்லத்திற்கே சென்று மருத்துவர் மற்றும் செவிலியர் ஆகியோர் சிகிச்சை அளிக்கின்றனர். மேலும், படுத்த படுக்கையில் உள்ள நோயாளிகளுக்கு மற்றும் இயன்முறை மருத்துவம் நோய்த் தடுப்பு பராமரிப்பு செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவ சிகிச்சையாளர் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

அன்மை காலத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம் வாழப்பாடியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தை நல மருத்துவர் உள்ளிட்ட 15 பேர் குழு கொண்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு சிறந்த திட்டமாக உள்ளது. அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஊராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோக திட்டங்கள், தெருவிளக்கு பராமரிப்பு, அடிப்படை வசதிகளுக்கான நிறைவேற்றப்படும் திட்டங்கள், மேலும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகள் குறித்து பரிசீலினை செய்து, சமந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீர் மேலாண்மையை மேம்படுத்தும் விதமாக மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டம்

சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்த உத்தரவிட்டதன் பேரில் அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, குண்டடம் ஊராட்சி ஒன்றியம் ஆறத்தொழுவு ஊராட்சி சுண்ணாம்புக்கள் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மாபெரும் மரக்கன்றுகள் நடும் பணியினை துவக்கி வைத்து ஆதிதிராவடர் நலத்துறையின் சார்பில் 42 இலவச வீட்டுமனைப்பட்டாக்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த் மோகன் இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.லட்சுமணன், தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) திருமதி.கனிமொழி, காங்கேயம் வட்டாட்சியர் திருமதி.சிவகாமி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.